**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 14-03-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-03-14 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-15 | 2023-03-16 | 2023-03-17 | 2023-03-18 | 2023-03-19 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 33.0 | 32.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 23.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 8.0 | 6.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 340 | 340 | 320 | 360 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 2 | 3 | 3 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான மழைத்தூரலுக்கு வாய்ப்புள்ளது. வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 90% ஆகவும், பகல் நேரங்களில் 40-50% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32.0-33.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23.0-24.0 °C ஆகவும் இருக்கும். காற்று மணிக்கு 6-8 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

19.03.2023 முதல் 25.03.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட அதிகமாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| நெல் வயலில் பாசி அதிகளவு படர்வதால் பயிர்களின் வளர்ச்சி குறைகிறது. இதைக் கட்டுப்படுத்த 2.0 கிலோ காப்பர் சல்பேட்டை மணலுடன் கலந்து இடவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஸூம் 25% WG 100 கிராம்/ எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| எள் | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் எள் பயிரில் குருத்து இலைப்பிணைக்கும் புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த கார்பரில் 50 WP 1000 கிராம்/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| முந்திரி | தேயிலை கொசு பூச்சியைக் கட்டுப்படுத்த முதலில் தயாமீதாக்ஸூம் 25% WG 100 கிராம்/எக்டர் தண்ணீரில் கலந்து துளிர்விடும் (ஃப்ளஷிங்) கட்டத்திலும், இரண்டாவது குளோர்பைரிபாஸை 2.0 மில்லி/லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணம் மற்றும் மூன்றாவது புரொபனோபாஸ் 1.0 மில்லி/லிட்டர் தண்ணீரில் கலந்து காய்பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவும். |
| தென்னை | 1. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பலா | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் பலா பயிரில் பழ அழுகல் நோயின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த 1 % போர்டோக் கலவை அல்லது காப்பர் ஆக்சி குளோரைடு 3.0 கிராம்/லிட்டர் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம்/லிட்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். |